*நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்.*

*ஆதியாகமம்* 3:19

**தென்னிந்திய திருச்சபை, திருநெல்வேலி திருமண்டலம்**

# புனே சேகரம்

*பிப்ரவரி* - 2021 *செய்தி மலர்* - 4

# பெதஸ்தா C.S.I. ஆலயம்



**கிறிஸ்துவுக்குள் பிரியமானவவர்களே,**

இன்றும் உயிரோடு இருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டவருடைய பெரிதான கிருபையினால் 2021ம் ஆண்டிலும் இரண்டாவது மாதத்தை காணச் செய்த என் தேவாதி தேவனுக்கு துதி ஸ்தோத்திரத்தை ஏறெடுக்கிறேன். இந்த மாதம் 17ம் தேதி முதல் லெந்து நாட்களுக்குள் பிரவேசிக்க இருக்கிறோம். லெந்து நாட்களில் இன்னும் ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ளவும், கிருபை வரங்களை பெற்றுக்கொள்ளவும் கர்த்தர் கிருபை செய்வாராக. இதில்

**“சாம்பலை” பற்றி தியானிக்கலாம்**

எபேர் (EPER) என்ற எபிரேயச் சொல் “சாம்பல்” என்று பொருள்தருகிறது. வேதாகமத்தில் பல இடங்களில் தனித்து நின்று பொருள் தருவதோடு, உபவாசத்தோடும் இனைந்து சொல்லப் படுகிறது. இரட்டு உடுத்தி உடையை கிழித்துக் கொண்டு சாம்பலில் அமர்ந்து இருத்தல் பழைய ஏற்பாட்டு காலத்தில் வழக்கத்தில் இருந்தது (எஸ்ரா 4:3; II சாமுவேல் 13:19; ஏசாயா 58:5).




“ஸ்போதோஸ்” (SPODOS) என்று சாம்பலுக்கு சொல்லப் படும் கிரேக்கச் சொல் புதிய ஏற்பாட்டில் மனம் திரும்புதல், தூய்மைப் படுத்துதல் என்ற பொருளில் பயன் படுத்தப் பட்டுள்ளது. (மத்தேயு 11:21; லூக்கா 10:13; எபி 9:12).

## 1. உடன் படிக்கையை புதுப்பித்தல்:

வேதத்தில் இஸ்ரவேல் மக்கள் தவறை உணர்ந்த போது இறைவனிடம் மன்னிப்பு வேண்டி இரட்டுடுத்தி சாம்பலில் அமர்ந்து உபவாசம் இருந்ததாக பார்க்கிறோம் (யோனா 3:5). மக்களின் கூட்டுப் பாவத்திற்கும், தனியாள் பாவத்திற்கும், அரசர்கள் இருட்டுடுத்தி சாம்பலில் அமர்வதும் ஓர் அடையாளச் செயலாக இருந்தது (எரேமியா 3:6). எரேமியா தீருவிற்கு எதிராக இறைவாக்கு உரைக்கையில் தன மக்களை என் மகளே நீ இரட்டுடுத்தி சாம்பலில் புரண்டு ஒரே மகன் முன்னிட்டு துக்கம் கொண்டாடுவது போல மனங்கசந்து புலம்பு என்கிறார் (புலம்பல் 6:26).

தானியேல் சாம்பலில் அமர்ந்து தேவனைத் தேடியதாக தானியேல் 9:3ல் கூறுகிறார். இவ்விதமாக சாம்பலில் அமர்ந்து வருந்தி இறைவனை தேடியதற்கு காரணம் இறைவனுக்கும், இஸ்ரவேல் மக்களுக்கும் உள்ள உடன் படிக்கையை புதுப்பிக்கவும், மக்கள் புது வாழ்விற்கு நேராக வழி நடத்தவும் தான். ஆதலால் நாமும் தேவனுக்கும் நமக்கும் உள்ள உடன் படிக்கையை இந்த லெந்து காலமாகிய வசந்த காலத்தில் புதுப்பித்துக் கொள்ளுவோம்.

## 2. இயேசுவின் உண்மையான வாழ்வு

பழைய ஏற்பாட்டு காலம் துவங்கி இயேசுவின் காலத்திற்கு பின், இன்றைய திருச்சபை வரையிலும் “சாம்பல்” என்ற ஒரு பொருள் பல சூழலில், பல பொருட்களில் பயன்படுத்தப் படுகிறது. இறை மக்கள், இறைவன் இவர்களுக்கு இடையே உள்ள உறவைப் பலப்படுத்தவும், புதுப்பிக்கவும், இது ஒரு சிறந்த தொடர்புச் சாதனமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ப்பு கருவிகள் வளர்ச்சியடையாத காலம் தொட்டு மானிடர் அடையாளத்தின் வாயிலாக இறைவனோடு தொடர்ப்பு கொண்டனர் என்பதற்கு இது சான்றாகிறது.

நீ மண்ணிலிருந்து எடுக்கப் பட்டபடியால் மண்ணிற்க்கே திரும்புவாய். (ஆதியாகமம் 3:19)

ஆதாம் ஏவாள் பாவம் செய்த போது தேவன் அவர்களுக்கு வழங்கிய சாபமாகிய ஒன்று. இது மனிதனின் தேவ மகிமையை இழந்தான் என்ற உண்மைக்கு அடிப்படை ஆதாரமாக இருக்கிறது. ஆனால் இயேசு வழங்கிய இரட்சிப்பு மனம் திரும்பவும் ,சாம்பலில் இருந்து தேவனோடு ஐக்கியம் கொள்ளவும் உதவுகிறது.

வேதத்தில் சாம்பல் அழிவுக்கு (ஆதி 18:27), துக்கத்திற்கு (எஸ்ரா 4:3) நியாயதீர்ப்புக்கு (புலம்பல் 3:16) மற்றும் மனம் திரும்பப்புதலுக்கு (லேவி 3:6) அடையாளமாக இருக்கிறது. சாம்பல் மண்ணிற்கு திரும்புவோம் என்பதை நினைவூட்டுகிறது.




லெந்து நாட்களை துவக்கும் நாம் நமது இருதயத்தை ஆராய்ந்து பார்த்து சுயநலமான வஞ்சனை நிறைந்த பாவங்களை விட்டு திரும்புவோம். வேதம் நமக்குத் தரும் ஆலோசனை (யோவான் 3:6) மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். மேலும் எல்லாவற்றிக்கும் மேலாக நம்முடைய உண்மைத் தன்மையை அல்ல. இயேசு நமக்காக உண்மையாய் இருந்தார். அவர் ஒருவரே உண்மையுள்ளவர் ஆகவே நாமும் உண்மையான முறையில் மனம் திரும்பி இரட்சிப்பை பெற்றுக் கொள்வோம். மனம் திரும்புவதை நிறுத்திவிட்டு கிறிஸ்தவர்கள் வளர்வதை நிறுத்தி விட்டார்கள். மரித்தவர்களால் எழுந்திருக்கவோ, உட்காரவோ முடியாது. அதேபோன்று நம் ஆத்துமாவும் மறித்து போன ஆத்துமாவாக இருக்க கூடாது. பிடிவாத குணம் தாழ்மைக்கு நம்மை தூரப் படுத்துகிறது. இந்த லெந்து நாட்களில் தெய்வீக வாழ்வில் வளர நமக்கு கிடைக்கும் வாய்ப்பாக கருதி நம்மை ஒப்பு கொடுப்போம். ஆமென்!

Dear beloved in Christ,

Greetings to all of you in the name of our Lord Jesus Christ who is alive even today. Thank the Lord of Lords who has enabled us to see the second month of 2021 by His immense grace. We are about to enter the period of Lent days beginning from the 17th of this month. During these lent days let us grow in the Lord. Now let us meditate on the word ‘Ash’.

"EPER" is the Hebrew term for ash. In the Bible, there are several places where ash is combined with fasting. Putting on sackcloth and sitting down in the dust (ashes) is a practice seen in the Old Testament. (Ezra 4:3, 2 Samuel 13:19, Isaiah 58:5)

"SPODOS" is the Greek term used for ash in the Bible. In the New testament it is used in the context of purifying, edifying and repentance. (Matthew 11:2, Luke 10:13, Hebrews 9:12)

## 1. Renewal of the Covenant:

In the Bible we see that whenever the Israelites were convicted of their sin they repented in sackcloth and ashes, and they prayed for God’s forgiveness (Jonah 3:5). This was a symbolic act, representing the collective sin of the people as well as the individual sin of the people (Jeremiah 3:6). When Jeremiah spoke God’s word against Tyre, he said, “Put on sackcloth, my people, and roll in ashes; mourn with bitter wailing as for an only son” (Jeremiah 6:26). Daniel sat in the dust and sought the Lord (Daniel 9:3). The reason for sitting in the dust and mourning in this way was to renew the covenant between God and the people of Israel, and for the people to renew their lives. Thus, we also need to renew our covenant with God in this season of lent.

## 2. The true life of Jesus:

From the period of Old Testament, and through the time of the New testament the word ash has been used in various meanings in different contexts. This ash serves as a tool for God’s people to strengthen and renew their relationship with God. This shows that the ash has been a tool to relate with God even in ancient times when there were no communication devices. “…for dust you are and to dust you will return.” (Genesis 3: 19). When Adam and Eve sinned, this was a curse which God pronounced against them. This serves as a proof to testify that man has lost the image of God from himself. But the salvation which Jesus gives is for us to repent and to commune with God.

In the Bible, ash denotes destruction (Genesis 18:27), sorrow (Ezra 4:3), judgement (Lamentations 3:16), repentance (Leviticus 3:6). Ash reminds us that we will return to dust.




As we begin to enter the days of lent let us examine our hearts and forsake the deceitful selfish works of sin. The counsel which God's word gives us "Flesh gives birth to flesh, but the Spirit gives birth to spirit" (John 3:6). Above all, ash denotes not our true self, but that Jesus was true for us. Jesus is the only true, faithful one, therefore let us repent and receive His salvation.

Christians who have stopped repenting have stopped growing. The dead cannot rise or sit, in the same way our souls should not be dead. Stubbornness distances us from humility. In this time of lent let us take it as an opportunity given by God to grow in godliness.

# திருவசன ஊழியம்

## MEMORY VERSES 2021

### தெபொராளே விழி
07-02-2021

தெபொராளாகிய நான் எழும்புமளவும், இஸ்ரவேலிலே நான் தாயாக எழும்புமளவும், கிராமங்கள் பாழாய்ப்போயின, இஸ்ரவேலின் கிராமங்கள் பாழாய்ப்போயின.

- நியாயாதிபதிகள் 5:7

### Arise, oh Deborah
07-02-2021

The peasantry prospered in Israel, they grew fat on plunder, because you arose, Deborah, arose as a mother in Israel.

- Judges 5:7

### ஒப்புரவாகுதலின் காலம்
14-02-2021

பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார். - எபேசியர் 2:16

### Lent : Time of Reconciliation
14-02-2021

And might reconcile both groups to God in one body through the cross, thus putting to death that hostility through it.

- Ephesians 2:16

### அரவணைக்கும் சபை
21-02-2021

உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிகப் பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள்.

- யாக்கோபு 2:8

### Warmth church
21-02-2021

You do well if you really fulfill the royal law according to the scripture, "You shall love your neighbor as yourself". - James 2:8

### வாழவைக்கும் விசுவாசம்
28-02-2021

பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்.

- அப்போஸ்தலர் 16:14(பி)

### Faith gives Life
28-02-2021

The Lord opened her heart to listen eagerly to what was said by Paul. - Acts 16:14(b)

# அனுதின வேத வாசிப்பு பகுதி:

| பிப்ரவரி | | | | |
|---|---|---|---|---|
| தேதி | காலை | காலை | மாலை | மாலை |
| 1 | யாத் 13:17 - 15:19 | நீதி 6:16-19 | மத் 21:23-46 | சங் 26:1-12 |
| 2 | யாத் 15:20 - 17:7 | நீதி 6:20-26 | மத் 22:1-32 | சங் 27:1-7 |
| 3 | யாத் 17:8 – 19:15 | நீதி 6:27-35 | மத் 22:33 - 23:12 | சங் 27:8-14 |
| 4 | யாத் 19:16 – 21:21 | நீதி 7:1-5 | மத் 23:13-39 | சங் 28:1-9 |
| 5 | யாத் 21:22 – 23:13 | நீதி 7:6-23 | மத் 24:1-28 | சங் 29:1-11 |
| 6 | யாத் 23:14 – 25:40 | நீதி 7:24-27 | மத் 24:29-51 | சங் 30:1-12 |
| 7 | யாத் 26:1 – 27:21 | நீதி 8:1-10 | மத் 25:1-30 | சங் 31:1-8 |
| 8 | யாத் 28:1-43 | நீதி 8:11-13 | மத் 25:31 – 26:13 | சங் 31:9-18 |
| 9 | யாத் 29:1 – 30:10 | நீதி 8:14-26 | மத் 26:14-46 | சங் 31:19-24 |
| 10 | யாத் 30:11 – 31:18 | நீதி 8:27-32 | மத் 26:47-68 | சங் 32:1-11 |
| 11 | யாத் 32:1 – 33:23 | நீதி 8:33-36 | மத் 26:69 – 27:14 | சங் 33:1-11 |
| 12 | யாத் 34:1 – 35:9 | நீதி 9:1-6 | மத் 27:15-34 | சங் 33:12-22 |
| 13 | யாத் 35:10 – 36:38 | நீதி 9:7-8 | மத் 27:35-66 | சங் 34:1-10 |
| 14 | யாத் 37:1 – 38:31 | நீதி 9:9-10 | மத் 28:1-20 | சங் 34:11-22 |
| 15 | யாத் 39:1 – 40:38 | நீதி 9:11-12 | மாற் 1:1-28 | சங் 35:1-16 |
| 16 | லேவி 1:1 – 3:17 | நீதி 9:13-18 | மாற் 1:29 – 2:12 | சங் 35:17-28 |
| 17 | லேவி 4:1 – 5:19 | நீதி 10:1-2 | மாற் 2:13 – 3:6 | சங் 36:1-12 |
| 18 | லேவி 6:1 – 7:27 | நீதி 10:3-4 | மாற் 3:7-30 | சங் 37:1-11 |
| 19 | லேவி 7:28 – 9:6 | நீதி 10:5 | மாற் 3:31 – 4:25 | சங் 37:12-28 |
| 20 | லேவி 9:7 – 10:20 | நீதி 10:6-7 | மாற் 4:26 – 5:20 | சங் 37:29-40 |
| 21 | லேவி 11:1 – 12:8 | நீதி 10:8-9 | மாற் 5:21-43 | சங் 38:1-22 |
| 22 | லேவி 13:1-59 | நீதி 10:10 | மாற் 6:1-29 | சங் 39:1-13 |
| 23 | லேவி 14:1-57 | நீதி 10:11-12 | மாற் 6:30-56 | சங் 40:1-10 |
| 24 | லேவி 15:1 – 16:28 | நீதி 10:13-14 | மாற் 7:1-23 | சங் 40:11-17 |
| 25 | லேவி 16:29 – 18:30 | நீதி 10:15-16 | மாற் 7:24 – 8:9 | சங் 41:1-13 |
| 26 | லேவி 19:1 – 20:21 | நீதி 10:17 | மாற் 8:10-38 | சங் 42:1-11 |
| 27 | லேவி 20:22 – 22:20 | நீதி 10:18 | மாற் 9:1-29 | சங் 43:1-5 |
| 28 | லேவி 22:21 – 23:44 | நீதி 10:19 | மாற் 9:30 - 10:12 | சங் 44:1-7 |

# மாற்கு

## I. பொருத்துக (Match)

| | |
|---|---|
| 1. பொவனெர்கேஸ் Boanerges | பர்திமேயு Bartimaeus |
| 2. லேகியோன் Legion | காணிக்கை Gift |
| 3. கபாலஸ்தலம் Skull | இடிமுழக்க மக்கள் Sons of thunder |
| 4. திமேயு Timaeus | அநேகர் Many |
| 5. கொர்பான் Corban | கொல்கொதா Golgotha |

## II. ஓரிரு வார்த்தைகளில் விடையளி (Answer in a word or two)


6. இயேசுவை கொலை செய்ய பரிசேயர் யாரோடு கூடி ஆலோசனை பண்ணினார்கள்?
With whom did the Pharisees conspire to kill Jesus?

7. இயேசு கடலில் எந்த ஜாமத்தில் நடந்தார்?
What was the time when Jesus walked on the sea?

8. மாற்கு சுவிசேஷத்தில் சதுசேயர் எத்தனை முறை வருகிறது?
How often in the Gospel of Mark does the Sadducee appear?

9. 1:2 இந்த எண்கள் எதை குறிக்கிறது?
1:2 What do these numbers mean?

10.




வசன குறிப்பிடம் என்ன?
What is the location of the script?

11. படகு பயணத்தில் இயேசுவின் மனித தன்மையை காட்டியது எந்த செயல்?
Which act showed Jesus' humanity on the boat?

12. ________________________ தேசத்தானாகிய கிரேக்க ஸ்த்ரீ?
________________________ Greek woman of what nation?

13. நான் மிகவும் சுறுசுறுப்பானவன் ஆனால் ஏன் எதிரி மிகவும் சோர்வானவன் - நாங்கள் யார்?
I am very active but my enemy is very tired – who are we?

14. என் சத்தத்தை கேட்டு ஒருவன் மிகவும் அழுதார் - நாங்கள் யார்?
Did someone cry so much when they heard my voice? Who are we?

15. விசுவாசிக்கிறவர்கள் நடக்கும் அடையாளங்கள் எத்தனை? அவை எவை?
How many signs will happen to believers during the day? What are they?

## மத்தேயு – விடைகள்

1. 5 பெண்கள் – தாமார், ராகாப், ரூத், பத்சைபாள் & மரியாள் (மத் 1:3, 5, 6 & 16)
2. அர்கெலாயு (மத் 2:22)
3. சீரியா (மத் 4:24)
4. சீஷர்கள் (மத் 19:15)
5. பரம பிதாவின் சமூகத்தை (மத் 18:10)
6. 3 (மத் 13:47; 14:17; 15:34)
7. 6 (மத் 25:35,36)
8. அம்மினதாப் (மத் 1:4; யாத் 6:23)
9. சதுசேயர் (மத் 22:23)
10. மின்னல் (மத் 24:27)
11. ஸ்தோத்திர பாட்டு (மத் 26:30)
12. தனது சகோதர, சகோதரி, தாயிக்கு (மத் 12:50)
13. a) மத் 25:16, 28
    b) மத் 24:40,41
    c) மத் 17:4

## ஜனவரி மாதம் வேதாகம கேள்விகளுக்கு சரியான விடைகள் எழுதினவர்கள்




1. Mrs. Prema Samson
2. Mrs. Deepa
3. Mrs. Jasmine Edwin
4. Mrs. Jennifer

# பிப்ரவரி மாத நிகழ்வுகள்

| தேதி | நேரம் | ஆராதனை |
|---|---|---|
| 1.02.2021 Monday | 7:30 PM | வாக்குத்தத்த ஸ்தோத்திர திருவிருந்து ஆராதனை |
| 7.02.2021 Sunday | 8:00 AM | திருவிருந்து ஆராதனை |
| 13.02.2021 Saturday | 7:00 PM | திரு. ஜோயல் ஜெயசிங் அவர்கள் வீடு பிரதிஷ்டை & ஜெபக் கூட்டம் |
| 14.02.2021 Sunday | 8:00 AM | ஞாயிறு ஆராதனை |
| 17.02.2021 Wednesday | 7:30 PM | Ash wednesday |
| 19.02.2021 Friday | 7:30 PM | First Lent Friday |
| 20.02.2021 Saturday | 7:30 PM | திரு. எட்வின் ஜாஸ்மின் அவர்கள் வீட்டு ஜெபக் கூட்டம் |
| 21.02.2021 Sunday | 8:00 AM | திருவிருந்து ஆராதனை |
| 26.02.2021 Friday | 7:30 PM | Second Lent Friday |
| 28.02.2021 Sunday | 8:00 AM | பெண்கள் பண்டிகை |

## BIRTHDAYS




16 Feb - Mrs. Jasmine Christopher
19 Feb - Mrs. B.Mercy Dora
27 Feb - Mrs. Kiruba Roseline R
29 Feb - Mr. S.E.Anandaraj

## WEDDING DAYS

| | |
|---|---|
| 8 Feb | Mr. & Mrs. Stanley Kumar S |
| 11 Feb | Mr. & Mrs. Richard Duke |
| 16 Feb | Mr. & Mrs. Mathavan V |



*பிறந்த நாள் மற்றும் திருமண நாளுக்கான வாக்குத்தத்தம்:*

எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.
*ஏசாயா 60 :1*

Arise, shine; for thy light is come, and the glory of the LORD is risen upon thee. *Isaiah 60 :1*

## குறிப்பு:

1. வேதாகமத் தேர்வு முழுதாளில் எழுதி அனுப்ப வேண்டிய கடைசி நாள்: 21-02-2021.

2. நாம் ஒரு வருக்கொருவர் ஆலோசனை பண்ணாமலும், அலைபேசியை பயன்படுத்தாமலும் தாங்களாகவே வாசித்து எழுதவும்.

3. கொடுக்கப்பட்டுள்ள வேத வாசிப்பு பட்டியலில் உள்ள படிதினமும் வேதத்தை வாசித்து வந்தால் ஒரு ஆண்டுக்குள்ளாக வாசித்து முடித்து விடலாம்.

**உங்களுக்காக ஜெபிக்கும்**

**Rev. S. சௌந்திரபாண்டியன்**

**சேகர குரு**

**புனே சேகரம்**